RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL
சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்

DOI: 10.34256/irjt22s328

OPEN ACCESS

# கண்மணி குணசேகரன் படைப்புகளில் சமூகக் கட்டமைப்பும் எதிர்வினையாக்கலும்

**அ. சேமலா வசந்தா** [அ, *]

[அ] தமிழ்த்துறை, டாக்டர். எஸ்.என்.எஸ். இராஜலட்சுமி கலை அறிவியல் கல்லூரி, கோயம்புத்தூர்-641049, தமிழ்நாடு, இந்தியா.

# Social Structure and Reactions in the Works of Kanmani Gunasekaran

**A. Shemala Vasantha** [a, *]

[a] Department of Tamil, Dr.SNS Rajalakshmi College of Arts and Science, Coimbatore-641049, Tamil Nadu, India

* Corresponding Author: vasanthaudhaya@gmail.com

Received: 19-04-2021
Revised: 30-04-2022
Accepted: 08-05-2022
Published: 16-07-2022

Check for updates

**ABSTRACT**

Literature is the instrument for recording the emotions of mankind. Human happiness and suffering are seen to be subject to the governance of society. Even the preferred sentiments are forgotten or made to be forgotten by society, which is the controlling instrument of every event in human life. Due to this, the man is affected psychologically. As a reaction to this, he suffers from mental conflict. Innovations are being created in Tamil focusing on this art. In this way, Kanmani Gunasekaran has become a remarkable person for creating novels that contain the miseries found in society. This article explores many psychological reactions can be felt in her novels, from mental struggle to the Oedipus complex.

**Keywords:** Kanmani Gunasekaran, Mental Struggle, Social Structure, Mankind

## முன்னுரை

காலந்தோறும் மக்களின் இலக்கிய இரசனைக்கேற்பவும் அந்தந்தக் காலகட்டங்களில் மக்களிடையே நிலவும் பிரச்சனைகளை மையமாகக் கொண்டும் இலக்கியங்கள் படைக்கப்பட்டு வருகின்றன. மிகப்பெரிய பரப்பளவைத் தன்னகத்தே கொண்டுள்ள புதின இலக்கியத்தில் பாடுபொருள் அடிப்படையில் பல்வேறு மாற்றங்கள் நிகழ்ந்து வருகின்றன. அம்மாற்றங்களில் குறிப்பிடும் படியாக இருப்பது உளவியல் மாற்றமாகும். உளவியல் சிந்தனைகளைக் களமாகக் கொண்டு பல்வேறு புதினங்கள் தோன்றிய வண்ணம் உள்ளன. அந்த வகையில் சமுதாயக் கட்டமைப்பில் மனம் உளசிக்கல்களில் அகப்பட்டு பல்வேறு மாற்றத்திற்கு உள்ளாகி வருவதை அறியலாம் அம்மனம் வரையறைக்கு உட்பட்டு செயல்பட்டாலும் தனக்கான விருப்பங்களை நிறைவேற்றிக்கொள்வதில் எதிர்வினையாற்றவும் விரும்புகின்றது. இதனால் மனித நடத்தை மாறுபடுகின்றது. இதனைப் பகுத்தாராய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

## மனத்தின் இயல்பு

மனித மனம் ஓர் எண்ணத்தையோ அல்லது எண்ணக் குவியல்களையோ தொடர்ந்து நினைத்துக் கொண்டிருக்கும் இயல்புடையது. மகிழ்ச்சி, துக்கம், வெறுப்பு, எதிர்பார்ப்பு, கோபம், பயம் போன்ற பல்வேறு உணர்வுகளின் இருப்பிடமாக உள்ளது. இவ்வுணர்வுகளில் வெளிப்படும் எண்ணங்கள் மனிதனுக்கு இன்பத்தைக் கொடுக்கக் கூடியதாகவோ அல்லது துன்பத்தைக் கொடுக்கக் கூடியதாகவோ

இருக்கும். இந்த இன்பத்திற்கும் துன்பத்திற்கும் இடையிலான எண்ணப் போராட்டங்களையே மனப்போராட்டம் என்று உளவியல் அறிஞர்கள் குறிப்பிடுகின்றனர்.

மனிதனுக்கு இன்பம் ஏற்படுகின்ற பொழுது அதனை முழுமையாக அனுபவித்தல் என்பது மனத்தின் இயல்பாகிறது. ஆனால் அதுவே துன்பம் ஏற்பட்டால் அந்த உணர்வை ஏற்றுக்கொள்ள முடியாமல் போராடுகின்ற நிலை ஏற்படுகின்றது. இந்நிலையிலிருந்து மீளமுடியாத மனம் அதற்கான காரணத்தைத் தன்னுள் பதிவுசெய்து வைத்துக்கொள்கின்றது. துன்பத்திலிருந்து வெளிவரமுடியாமல் போராடும் மனம் பல்வேறு சிக்கல்களுக்கு உள்ளாகி வெறுப்பு, கோபம், பயம் போன்ற எண்ணங்களினால் எதிர்மறையாகச் சிந்திக்கத் தொடங்குகின்றது. இங்கு, “மனம் இயல்பாகவே நிலையானதல்ல. திரிபுடையதுதான். தனி மனிதனின் முரண்பாடான இரண்டு அல்லது இரண்டிற்கு மேற்பட்ட விருப்பங்கள் மனச்சிதைவைத் தோற்றுவிக்குமாயின் அதை மனப்போராட்டம் எனலாம்” என்ற ஆ. மீனாட்சியின் கருத்து ஒப்புநோக்கத்தக்கது (Meenashi, 2006).

## மனப்போராட்டத்திற்குக் காரணம்

இரண்டிற்கு மேற்பட்ட விருப்பங்கள் மனத்துள் தோன்றி அதை நிறைவேற்ற முடியாமல் ஏன்? எதற்கு? எப்படி? என்ற பல கேள்விகளோடு மனம் போராடத் தொடங்குகின்றது. தனது விருப்பத்தை நிறைவேற்ற முடியாத வேளைகளில், இப்போராட்டம் ஆழ்மனதிலிருந்து மேல் எழுகின்றது. மனப்போராட்டத்திற்குக் காரணமாக இருப்பது பாலுணர்ச்சிக்கு எதிராகச் செயல்படுவதே எனப் ஃப்ராய்டு அறிவுறுத்துகின்றார். பாலுணர்வும், பாலுணர்வுக்கு எதிராக உள்ள பண்பாட்டு உணர்ச்சியும் இயல்பிலேயே முரண்பட்டு நிற்கும். ஒவ்வொரு மனிதனுக்குள்ளும் இவ்விரண்டு முக்கியமான உணர்ச்சிகளும் எழுந்து மனிதனைப் போராட தூண்டுகின்றன. இப்போராட்டத்தில் மனம் பல்வேறு சிதைவுகளுக்கு உட்பட்டாலும் அதனை எதிர்த்துப் போராடுவதற்குத் தன்னைப் பழக்கப்படுத்திக் கொள்கின்றது. இதனை, “ப்ராய்ட் உளப்போராட்டத்தின் அடிப்படை அமைப்பாக பாலுணர்ச்சியையும் பண்பாட்டுணர்ச்சியையும் முன்னிலைப் படுத்துகின்றார்” என்ற செய்தியின் மூலம் உணர்ந்து கொள்ள முடிகிறது (Ravichandran, 2015).

இவ்விளக்கத்தில் இயற்கையாக அமையப்பெற்ற பாலுணர்வும், அப்பாலுணர்விற்கான தடையும் போராட்டம் நடத்துவதாகக் கூறப்படுகின்றது. இவையிரண்டும் தங்களது வலிமையை நிலைநிறுத்த நடத்தும் போராட்டமே உளப்போராட்டத்தின் தீவிரத் தன்மையாகின்றது.

## மனத்தின்படி நிலை

மனிதன், சமூகத்தைச் சார்ந்தவனாக இருப்பதால் அவன் பாலுணர்வுக்குத் தரும் முக்கியத்துவத்தை விட சமூக விழுமியத்திற்கே முக்கியத்துவம் தருகின்றான். பாலுணர்வின் வலிமைக்குச் சாய்வதன் காரணமாகச் சமூகத்தில் தனது மதிப்பு குறைந்து விடக்கூடாது என்ற எண்ணமே இதற்கு அடிப்படை காரணமாக அமைகின்றது. அதனால் மனிதன் தனது பாலுணர்வு இச்சையை ‘அமுக்கம்’ என்ற உளநிலைக்குள் அடக்கி வைக்கின்றான்.

மனித மனம் தற்காப்பு நடவடிக்கை மேற்கொள்ளும் காரணியாகவே ‘அமுக்கம்’ உள்ளது என்பதனை உணர முடிகின்றது. மனிதனால் கட்டுப்படுத்தப்பட்ட உணர்வுகள் அனைத்துமே நனவிலிக்குள்; அடக்கப்பட்டுப் பதிவாகி விடுகின்றன. ஆதலால் நனவிலி தோன்றுவதற்குக் காரணமாக அமைவது அமுக்கமே என்பது புலனாகின்றது. இத்தகு மனப்போராட்டம், அமுக்கம் போன்றவற்றைக் கண்மணி குணசேகரனின் புதினங்களில் வரும் பாத்திரங்கள் தங்களது கூற்றுக்களின் வழியாகவும் தமது செயல்களின் வழியாகவும் தமது மனத்திற்குள்ளேயே நினைத்துப் பார்த்தலின் வழியாகவும் வெளிப்படுத்துபவர்களாக உள்ளனர்.

## அஞ்சலை - மனப்போராட்டம்

'அஞ்சலை' புதினத்தில் வரும் 'அஞ்சலை' என்னும் பாத்திரம் தொடக்கம் முதல் இறுதி வரை வாழ்க்கையை எதிர்த்துப் போராடும் பெண்ணாகவே காணப்படுகின்றாள். அவளது ஒவ்வொரு செயல்பாடும் அவளின் மனப்போராட்டத்தை வெளிப்படுத்துவதாக அமைந்துள்ளது.

அஞ்சலை தனது தாய், இரு சகோதரிகள் மற்றும் தம்பியுடன் வாழ்ந்து வருகின்றாள். தம்பி பள்ளியில் படித்துக் கொண்டிருக்கிறான். இரு சகோதரிகளுக்கும் திருமணமானவுடன் இவளுக்குத் திருமணம் செய்வதற்கான ஏற்பாடுகள் தொடங்கப்படுகின்றன. அக்காவின் கணவன் இவளை மணம் முடிக்க விரும்பிய பொழுது அஞ்சலை மறுத்ததால் வஞ்சனைச் செய்ய மனத்துள் எண்ணுகின்றான். தன்னை நல்லவனாகச் சித்தரித்து அவளுக்கு ஏற்ற மாப்பிள்ளையாகத் தேவராசு என்பவனை அழைத்து வருகின்றான். ஆனால் மணமேடையில் அவளுக்குப் பொருத்தம் இல்லாத தேவராசுவின் தம்பி கணேசனை மணம் முடித்து வைக்கின்றான். அஞ்சலை, தனக்கு ஏற்பட்ட இந்த வஞ்சகச் செயலை நினைத்து வருத்தப்படுகின்றாள். அவள் ஏமாற்றப்பட்டதை, "அதிகாலை நாலரை முகூர்த்தம்… அஞ்சலை குனிந்த தலை நிமிராமல் பக்கத்தில் குந்தியிருக்கிறவன் மீசைக்காரன் என்று நினைத்துக்கொண்டு சந்தோசமாய்க் குந்தியிருக்கிறாள். அதிக ஆட்கள் இல்லை. இருந்த கொஞ்ச பேரும் தூக்கக் கலக்கம் தெளியாமல் குந்தியிருக்கிறார்கள்" (கண்மணி குணசேகரன்,1999) என்ற வரிகள் எடுத்துரைக்கின்றன.

அஞ்சலை இவ்விடத்தில் தனது திருமண வாழ்வு தான் நினைத்தப்படி அமையாததை எண்ணியும், மற்றவர்களை நம்பி தன் வாழ்க்கையைத் தொலைத்த அவலத்தையும், ஏமாற்றப்பட்டு விட்டோம் என்ற உணர்வையும் ஒரு சேர அனுபவிக்கின்றாள். அந்த நொடியிலிருந்தே போராட்டம் தொடங்குகின்றது. தாலி கட்டியதற்காகக் கணேசனை மாப்பிள்ளையாக ஏற்றுக்கொள்ள மறுத்துத் தாலியைக் கழற்றி அவனது முகத்தில் தூக்கி எறிந்து விடலாமா? என்று எண்ணுகின்றாள். அவ்வாறு தூக்கி எறிந்து விட்டால் இச்சமூகம் தன்னை எவ்வாறெல்லாம் பழி தூற்றும் என்று அவள் எண்ணிப் பார்ப்பதை, ஃப்ராய்டின் உளப்போராட்டம் கருத்தாக்கத்தோடு ஒப்பிட்டுப் பார்க்கும் பொழுது அஞ்சலையைப் பெண் பார்க்க வந்த தேவராசு கறுப்பாக, சுருள் முடியோடு, அடர்ந்த மீசையோடு அழகாக இருக்கின்றான். அவனைப் பார்த்தும் அவளுக்குப் பிடித்து விடுகின்றது. இதில் மறைமுகமாகப் பாலுணர்ச்சியே அவளிடம் மேலோங்கி இருக்கின்றது. ஆனால் தான் ஏமாற்றப்பட்டதை உணர்ந்தும் சமூகத்தில் தனக்கு உள்ள மதிப்பிற்காக அச்சம் கொண்டு பாலுணர்வைத் தனது மனத்தின் ஆழத்தில் அடக்கி வைத்துப் போராடுகின்றாள்.

சமூகத்தின் பேச்சிற்குப் பயந்து கொண்டு கணேசனது ஊருக்குப் பிழைக்க வந்தாலும் அவனுடன் மனதளவிலும் உடல் அளவிலும் உறவில் ஈடுபட அவளுக்கு விருப்பம் இல்லை. அஞ்சலையின் மனம் தேவராசு மீது மீண்டும் ஈடுபாடு கொண்டாலும் ஆழ்மனத்தினுள் அவன் மீதுள்ள கோபத்தைத் தனது கணவன் மீது காட்டுகின்றாள். தேவராசுவைப் பற்றிய நினைவுகளைக் கட்டுப்படுத்தி வைத்திருந்தாலும் சூழ்நிலையின் தாக்கத்தால் தன்னிலை மறந்து அதை, கோப உணர்ச்சியாக வெளிப்படுத்தி விடுகின்றாள். அவளை அறியாமல் அவளுக்குள் ஏற்பட்ட பயம் ஏற்பட்டு விடுகிறது. இந்தச் சூழ்நிலையைத் தன்னால் ஏற்றுக்கொள்ளவும், விட்டு நீங்கவும் முடியாமல் போராடுகின்றாள். இதனால் தன்னை ஏமாற்றியவர்கள் மீது வெறுப்பை மட்டுமே காட்டி வருகின்றாள்.

தனக்கு ஏற்பட்ட இந்நிலையால் யார் மீதும் நம்பிக்கை இல்லாத ஒரு மனநிலை அவளுக்கு ஏற்படுகின்றது. 'யாருக்கோ மகளாகப் பிறந்து யாரிடமோ அடிவாங்குறோமே' என்ற அவளது இயலாமைகாண முடிகின்றது. தன்னால் எதுவும் செய்ய இயலாத பொழுது சோர்ந்துவிடாமல் தன்னைத்தானே தேற்றிக்கொண்டு அங்கிருந்து தன் தாய் வீட்டிற்கே திரும்பி வருகின்றாள். அவ்வாறு வருகின்ற வேளையில் தனது மூத்த சகோதரி கல்யாணியைச் சந்திக்க நேரிடுகின்றது. அஞ்சலையின் நிலையை எண்ணி பரிதாபம் கொண்ட கல்யாணி தனது கொழுந்தன் ஆறுமுகத்திற்கு அஞ்சலையைத் திருமணம் முடித்து வைக்கின்றாள். இத்திருமணமும் அவளுக்கு எதிர்பார்த்தபடி அமையாமல் போகிறது.

திருமணமான பிறகு சில நாட்களில் கல்யாணிக்கும் ஆறுமுகத்திற்கும் தவறான உறவு இருப்பது அவளுக்குத் தெரியவருகின்றது. இதனால் அஞ்சலை வெறுப்பும் அவமானமும் அடைகிறாள். மீண்டும் மனத்திற்குள் பெரிய போராட்டம் உருவாகின்றது. மனக்குழப்பத்தின் உச்சத்தில் தனக்குத்தானே சமதானம் செய்து மனத்தைத் தேற்றுவதற்கு முயல்கின்றாள். அஞ்சலையின் மனப்போராட்டத்தின் உச்சமாக ஆறுமுகத்தைத் தனது அக்காவுடன் பார்த்தக் காட்சி அமைகின்றது.

இதில் தன் நிலைமையைக் குறித்து அஞ்சலை அதீதமாய்க் கவலை கொள்வதையும், தனது முதல் திருமண வாழ்வைப் போல இவ்வாழ்வும் தனக்கு ஏமாற்றத்தைத் தந்ததை உணர்ந்து அத்துன்பத்தைத் தாங்கிக் கொள்ள முடியாமல் தவிப்பதையும் உணரமுடிகின்றது. அஞ்சலையின் மனப்போராட்டத்திற்குக் காரணமாக இருப்பது கல்யாணியின் 'பாலுணர்வு' வேட்கை ஆகும். அவளது பாலுணர்ச்சி அஞ்சலையின் இரண்டாவது திருமண வாழ்வை அர்த்தமற்றதாக மாற்றி விட்டது.

அஞ்சலை தனது இரண்டாவது திருமணமும் நிலைக்காத நிலையில் வெண்ணிலா என்ற பெண்குழந்தையைப் பெற்று தனது தாய் வீட்டில் விட்டுவிட்டு தனது முதல் கணவனிடம் மீண்டும் தஞ்சமடைகின்றாள். அங்கு அஞ்சலை இரு பெண் குழந்தைகளுக்குத் தாயான நிலையிலும் தனது முதல் மகள் வெண்ணிலாவை அவளால் மறக்க முடியவில்லை. இந்நிலையில் வெண்ணிலா தனது தந்தை ஆறுமுகத்தைப் பற்றிக் கேள்விப்பட்டு அவன் இருக்கும் ஊரான தோளாருக்குச் சென்று விடுகின்றாள். இதை அறிந்த அஞ்சலை பெரும் ஆத்திரத்தோடு சென்று அவளை அடித்து, உதைத்து, இழுத்து வருகின்றாள்.

வெண்ணிலாவை தனது தாய் வீட்டிலேயே வளர்த்த அஞ்சலை அவளைத் தன் தம்பி மணிகண்டன் திருமணம் செய்து கொள்வான் என்று நினைத்திருந்தாள். ஆனால் கல்யாணியின் மகளைத் திருமணம் செய்துகொள்வது தான் தம்பியின் விருப்பம் என்று தெரிந்த நிலையில் அவனிடம் வெண்ணிலாவைத் திருமணம் செய்து கொள்ளச் சொல்லி கேட்கின்றாள். ஆனால் அவன் மறுக்கவே மீண்டும் அவளது மனம் ஏமாற்றத்திற்கு உள்ளாகின்றது. இந்நிலையில் வெண்ணிலாவும் தனது தாயைத் தேடி வந்து விடுகின்றாள். அங்கு கணேசனும், அவனது அண்ணன் குடும்பமும் அவளை ஏற்றுக்கொள்ள மறுக்கின்றனர். அவர்கள் ஏற்றுக்கொள்ளாவிட்டாலும் எதிர்ப்பை மீறி தனது மகளைத் தன்னுடன் வைத்துக் கொள்கின்றாள் அஞ்சலை.

தனது மகள் தன்னுடன் இருப்பது மேலும் அவளுக்குச் சிக்கலை ஏற்படுத்துகின்றது. அக்குடும்பத்தினர், சொத்தைப் பிரிக்கும் பொழுது வெண்ணிலாவும் பாகத்திற்கு வந்துவிடுவாளோ என்று எண்ணி அவளை வீட்டை விட்டு விரட்ட எண்ணுகின்றனர். வெண்ணிலா தனது வீட்டில் தங்கியிருப்பது கணேசனுக்கும் பிடிக்கவில்லை. அதனை அஞ்சலையை அடித்து உதைப்பதன் மூலம் வெளிப்படுத்துகின்றான்.

போராடி வெல்லமுடியாத நிலையில் அஞ்சலை இனி தற்கொலைலையே இதற்குத் சரியான தீர்வு என்றெண்ணி உயிரைவிடத் துணிகின்றாள். ஒவ்வொரு மனிதனும் தனது வாழ்வில் ஏற்படும் சிக்கல்களோடு போராடி வெற்றி பெற முடியாமல் மனச்சிக்கல்களினுடாக வாழ்ந்து வருகின்றனர். சிக்கல்களுக்குத் தீர்வு தேடாமல் மீண்டும் ஒரு புது சிக்கலுக்குள் உழன்று போராடும் நிலையை ஆசிரியர்; 'அஞ்சலை' புதினத்தின்; வழி இனம் காட்டுகின்றார் (Kanmani Gunasekaran, 1999).

## நெடுஞ்சாலை - மனப்போராட்டம்

'நெடுஞ்சாலை' புதினத்தில் இடம்பெறும் புதினமாந்தர்கள் இன்ப நிகழ்வை எதிர்பார்த்து அது நிறைவேறாமல் போன சூழலில்; மனப்போராட்டத்திற்கு உள்ளாகின்றனர். அப்புதின மாந்தர்கள் வாயிலாக, மனத்தில் அச்சத்தினால் ஏற்படும் போராட்டத்தையும், வேலைப்பளுவினால் ஏற்படும் போராட்டத்தையும் காணமுடிகின்றது.

ஏழைமுத்து தற்காலிக ஓட்டுநர் பணி பெறுவதற்காக ஏற்கனவே அங்கு ஓட்டுநராக வேலை பார்த்து வரும் பெரியசாமி என்பவர் மூலம் முயற்சி செய்கின்றான். அவ்வேளையில் அவன் பேருந்து ஓட்டிப் பழக்கமற்ற காரணத்தினால் சோதனை ஓட்டத்தின் பொழுது சரியாகப் பேருந்தை

இயக்கவில்லை. இதனால் அவனுக்கு வேலைவாய்ப்பு மறுக்கப்படுகிறது. அப்பொழுது பெரியசாமி அங்கிருந்த அதிகாரியிடம் பேருந்தைத் தொடர்ந்து ஓட்டும் பொழுது சரியாக ஓட்டிவிடுவான் என்று உறுதி கூறுகின்றார். ஆயினும் பெரியசாமி ஏழைமுத்துவிற்கு வேலை கிடைக்க வேண்டுமென்று எதிர்பார்த்தாலும் வேலை கிடைக்கும் சூழலில் ஏழைமுத்து பேருந்து ஓட்டும் பொழுது அதில் பயணம் செய்யும் மனிதர்களுக்கு ஏதேனும் ஆபத்து என்றால் அதற்குத் தான் மட்டுமே பதில் சொல்ல வேண்டி வரும் என்ற பயமும் அவருக்குள் தோன்றியதை, "பெரியசாமி தர்மசங்கடமாக நின்று கொண்டிருந்தார். ஆளின் ஓட்டுகிற தராதரம் பாராமல் வாயை விட்டுவிட்டோமோ என்று உதறியது. நாளைக்கி லைன்ல ஏதாவது சிக்கல் என்றால் ஜாமீன் போட்ட நம் தலை தான் உருளும் என்கிற பயம் (கண்மணி குணசேகரன், 2009) என்ற வரிகள் வெளிப்படுத்துவதாக உள்ளன. இதனை, "சமூகத்தில் வெளிப்படுத்த முடியாத சமூக நலத்துக்கு ஒவ்வாத சில ஊக்கங்களும் எழுச்சிகளும் மனிதனிடம் இயல்பாக உள்ளன. இவை சூழ்நிலைக்கும் மனச்சாட்சிக்கும் பொருந்தாதவை. இருப்பினும் இவை நம் செயல்களில் வெளிப்படத் துடித்துக்கொண்டிருப்பவை. இவை வெளிப்பட முடியாத போது உளப்போராட்டங்கள், மனமுறிவு ஆகியவை தோன்றுகின்றன" என்பார் (Gnanasundaratharasu, 2001). இக்கூற்று பெரியசாமியின் பாத்திரத்திற்கு முற்றிலும் பொருந்துவதாய் அமைந்திருப்பது குறிப்பிடத்தக்கது.

ஏழை முத்துவிற்கு வேலை வாங்கிக் கொடுக்க வேண்டும் என்ற எண்ணம் பெரியசாமியின் மனத்திற்குள் இருந்தாலும் பலர் பயணம்செய்யும் பேருந்தை இயக்கத் தெரியாத ஒருவனுக்கு வேலை வாங்கிக் கொடுத்தால் அது சமூக நலத்திற்குக் கேடாக இருப்பதோடு தனக்கும் ஏதேனும் சிக்கல் ஏற்பட்டு விடுமோ என்ற சிந்தனை மேலோங்குவதால் அது அவருக்குள் ஓர் அச்சத்தை ஏற்படுத்துகின்றது. அந்த அச்சமே மனப்போராட்டத்திற்கு முக்கியக் காரணமாக அமைகிறது என்பதனை அறியமுடிகின்றது. "ஆபத்து என்று உணரும் நிலையில் அமுக்கி வைக்கப்படும் போது அவ்வுணர்வுகள் அப்படியே வெளிப்படாமல் வேறு உணர்வுகளாக இடப்பெயர்வாகி வெளிப்படும்" என்னும் கூற்று நினைக்கத்தக்கது (Kanmani Gunasekaran, 2003a).

## கோரை - மனப்போராட்டம்

'கோரை' புதினத்தில் விவசாயக் குடும்பங்கள் அன்றாட வாழ்வில் எதிர்கொள்ளும் சிக்கல்களையும், அச்சிக்கல்களினால்; அவர்களது மனதில் எழும் போராட்டங்களையும் உத்தண்டி புரணி போன்ற பாத்திரங்களின் மூலமாகத் தெரியவருகிறத

புரணியும் உத்தண்டியும் கணவன் மனைவி. அவர்கள் நிலம் வாங்கி அதில் மிளகாய் விதைக்கின்றனர். அவர்கள் உரமிட்ட பன்றியின் சாணமானது கோரைக்கிழங்கை உண்ட பன்றியின் சாணமாகையால் மிளகாய் நன்கு விளைந்ததுடன் அதனுடன் சேர்ந்து கோரைப்புல்லும் முளைக்கத் தொடங்குகின்றது. அதிலிருந்து அவர்களது மனம் போராட்டத்திற்கு உள்ளாகின்றது.

மிளகாய் விளைச்சலுக்குப் பிறகு கடலைப் பயிரை விதைக்கின்றனர். ஆனால் கடலையின் விளைச்சல் குறைந்து கோரைப் புல் அதிகரித்ததால் அப்புல்லை நீக்குவதற்கு அவர்கள் மிகவும் போராடுகின்றனர். உடலும் மனமும் சோர்வடைகிறது. மனம் சோர்வடைவதால் அவர்களது வாழ்விலும் அன்பு நீங்கி ஒரு வெறுப்பு கலந்த உணர்வு மேலோங்குகின்றது. இதனால் இருவருக்குமிடையே நாளுக்கு நாள் சண்டை அதிகரித்துக்கொண்டே செல்கின்றது. சண்டையில் உத்தண்டி தன் மனைவி அடித்துவிட அவள் கோபம்கொண்டு தாய்வீட்டிற்குச் சென்று விடுகின்றாள். அவள் செல்லும் வழியில் தற்கொலை போன்ற தவறான முடிவு எடுத்து விடுவாளோ என்ற அச்சம் அவனது மனத்தில் தோன்ற அவளை அழைத்து வர அவன் செல்லுகிறான். ஏன் அவளை அடித்தோம்? என்ற உணர்வே அவனது மனத்தில் மீண்டும் மீண்டும் தோன்ற, செய்வதறியாமல் மனத்தோடு போராடத் தொடங்குகிறான். அதனால் தன்மீது அவன் வெறுப்புணர்வு கொள்ளவும் செய்கின்றான்.

அந்த உணர்வுடன் போராடத் தொடங்கும் அவனது மனப் போராட்டத்தை, "உத்தண்டிக்கு வீட்டுக்குத் திரும்பி விடலாமா என்று கூட மனதில் ஓடியது. திரும்பி விடலாம் அவளுக்கு ஒன்றும் தெரியாமல் போய்விடாது. இந்த முந்திரிக்காடு எல்லாவற்றையும் ஈக்கு ஈக்காக பார்த்தவள்......ஒரு

உப்புக்கும் பெறாத வி~யம் இப்படியாகி முந்திரிக்காhட்டில் போய்க் கொண்டிருப்பதை நினைக்க நினைக்க அவன் மேலேயே வெறுப்பு வந்தது” என்ற வரிகள் புலப்படுத்துகின்றன (Kanmani Gunasekaran, 2003b).

ஒரு செயலைச் செய்து முடிக்க வேண்டும் என்று மனதில் எண்ணம் தோன்றிவிட்டால் அதனை நிறைவேற்றாமல் விடக்கூடாது என்ற முடிவுடன் போராட முனைவது மனித இயல்பு. அந்த இயல்பிலிருந்து மாறுபடாத புரணியின் மனத்தில் தான் கோரைப் புல்லிற்கு இரையாக விடுவதா? என்ற எண்ணம் வருகின்றது. ஆதலால் அவள் கோரையை அடிக்கிழங்கோடு வெட்டி எடுப்பது என்று முடிவு செய்து செயல்படவும் தொடங்குகிறாள். இவ்வாறு மூன்று புதினங்களிலும் மனித மனம் உளச்சிக்கலுக்கு ஆட்பட்டு சிக்கித் தவிப்பதைக் காணமுடிகிறது.

## முடிவுரை

இலக்கியத்திற்கும் சமுதாயத்திற்கும் நெருங்கிய தொடர்பு உண்டு. மனிதனது வாழ்க்கையைத் தன்னுள் உள்வாங்கிக்கொண்டு பல கோணங்களில் வெளிப்படுத்தும் திறன் கொண்ட சமுதாயத்தினால் அவன் மனப்போராட்டத்திற்கு ஆட்படுபவனாகின்றான். இதனால் நேர்-எதிர் என்ற இரண்டு தளங்களில் தன்னை நிலைநிறுத்தப் போராடுகின்றான். தனது சுய விருப்பு வெறுப்புகளை அமுக்க நிலைக்குள் வைக்கும் போது எதிர்வினையாற்ற விழைகின்றான் என்பது பெறப்படுகிறது.

## References


Gnanasundaratharasu, (2001) KAMBANUM ulaviyalum, Tamilsolaii Pathippagam, Pudukottai, India.

Kanmani Gunasekaran, (1999) Anjalai, United Writers, Chennai, India.

Kanmani Gunasekaran, (2003a) Nedunjaalai, Tamizhini Pathippagam, Chennai, India

Kanmani Gunasekaran, (2003b) Korai, Tamizhini Pathippagam, Chennai, India.

Meenashi, M., (2006) Magalir padaippukalil ulaviyal nokku, Abisiva Pathippagam, Coimbatore, India.

Ravichandran, T, K., (2015) Sigmund Freud Ulappaguppaaivu Arivial, Alaikal veeliyeedu, Chennai, India.



**Funding:** No funding was received for conducting this study.

**Conflict of Interest:** The Author has no conflicts of interest to declare that they are relevant to the content of this article.



**About the License:**

Attribution 4.0 International (CC BY 4.0)

© The Author 2022. The text of this article is licensed under a Creative Commons Attribution 4.0 International License